செ.வெ.எண்: 60 நாள்: 25.11.2019

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில், ஒரு நபருக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தின் மூலம் 5 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.17,865 மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும், புதிய மருத்துவ திட்டத்தின்கீழ் 01 நபருக்கு ரூ.1,74,500/- லட்சத்திற்கான காசோலையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (25.11.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், முதியோர் உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, பட்டா பெயர் மாற்றம், கல்விக்கடன், தொழிற்கடன் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வேண்டிய கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை, பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். மேலும், மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாற்றுத்திறனாளிகளின் இருப்பிடங்களுக்கு சென்று கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தின் மூலம் 5 பயனாளிகளுக்கு தலா ரூ.3,573/- விதம் மொத்தம் ரூ.17,865 மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும், ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், மருதன்வாழ்வு இந்து நாடார் நடுநிலைப்பள்ளி, சத்துணவு சமையலராக பணியாற்றி, பணியிடை காலமான திருமதி.லெட்சுமி என்பவரது மகள் திருமதி.கா.பச்சம்மாள் என்பவருக்கு கருணை அடிப்படையில்,முறப்பன்,ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சத்துணவு சமையலர் பணிக்கான நியமன ஆணையினையும், புதிய மருத்துவ திட்டத்தின்கீழ் ஓய்வூதியர்களுக்கு மருத்துவ செலவின தொகை திருப்பி வழங்கும் திட்டத்தில் திருமதி.எஸ்.பாப்பா என்பவருக்கு ரூ.1,74,500/- க்கான காசோலையினையும், என மொத்தம் 6 நபர்களுக்கு ரூ.1,92,365/-க்கான காசோலையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திற்கு வரப்பெற்ற புதிய நான்கு சக்கர வாகனத்தை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.கந்தசாமி அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.விஷ்ணு சந்திரன்,இ.ஆ.ப., சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜித் சிங் கலோன்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தனபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (கணக்கு) திருமதி.கிறிஸ்டி, சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.சங்கரநாரயணன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பிரம்மநாயகம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**